# 1

# தேவனுடைய நோக்கத்திற்கான மக்கள்

*''தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக ...'' (எபே. 3:9, 10).*

வேத வசனங்களில் ஒரு சுருக்கமான விளக்கமானது அநேக வேளைகளில் ஒரு மிகவும் வல்லமையுள்ள அர்த்தத்தைக் கொண்டு வருவதாயிருக்கும். எடுத்துக்காட்டாக, இது "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே'' (எபே. 1:7) என்ற மூன்று வார்த்தைகளைப் பொறுத்தமட்டில் உண்மையாய் உள்ளது. இந்தச் சொற்றொடரானது பவுல் எழுதிக் கொண்டிருந்த பாவமன்னிப்பைத் தகுதிப்படுத்துகின்றது. இது, தேவன் கிருபையில் ஏழ்மையுள்ளவராயிருந்தால், அவரிடத்திலிருந்து நாம், நமது பாவங்களை ''புறம்பே அனுப்பும்'' விஷயத்தில் அதிகமாய் எதிர்பார்க்க முடிந்திராது என்று நமக்குக் கூறுகின்றது. இருப்பினும், அவர் கிருபையில் ஐசுவரியமுள்ளவராயிருந்தால், பவுல் உறுதிப்படுத்துவது போல, நமது எல்லா மீறுதல்களையும் மூடுவதற்கும் மேலான ஏராளமான மன்னிப்பை நாம் எதிர்பார்க்க முடியும். ஒரு ஏழை மனிதர் தம்முடைய உடமைகளி"லிருந்து" அல்லது தம்முடைய உடமைகளின்"படி" நமக்கு ஒரு வெகுமதி அளித்தால், நாம் ஒரு அற்பமான வெகுமதியையே பெறுவோம், ஏனெனில் அந்த ஏழை மனிதர் சிறிதளவே வைத்திருப்பவராய், அதிலிருந்து நமக்கு எடுத்துக் கொடுப்பவராய் இருப்பார். இருப்பினும், ஒரு பணக்கார மனிதர் அவருடைய ஐசுவரியங்களில் ''இருந்து'' அல்லது அவருடைய ஐசுவரியங்களின் "படி" நமக்குக் கொடுப்பாரென்றால், நாம் மிகப் பெரிய மற்றும் மட்டுமீறிய தொகையொன்றை, அவருடைய கொடுக்கும் திறனுக்கு தகுந்த விகிதத்திலான தொகையொன்றைப் பெறுவோம். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே" என்பது தேவனுடைய மன்னிப்பை வெளிப்படுத்துகையில் இதுவே பவுலின் வலியுறுத்தமாய் இருந்தது. தேவன் கிருபையில் ஐசுவரியமுள்ளவராய் இருப்பதால், அவரை விசுவாசிப்பவர்களுக்கு அவரது மன்னிப்பானது வரையறையற்றதாகவும்,

மட்டுமீறியதாகவும் உள்ளதென்று அவருடைய (பவுலினுடைய) வார்த்தைகள் நமக்கு உத்தரவாதம் அளிக்கின்றன.

வேதாகமத்தில் உள்ள ஒரு சிறு வாக்கியம் அல்லது வாக்கியத்தின் ஒரு பகுதியாக உள்ள இந்த நினைவுபடுத்துதலானது நமக்கு முன்பாக இந்த சத்தியத்தைப் பற்றிய மிகப் பெரிய அர்த்தம் ஒன்றைக் கொண்டு வர முடியும்: நாம் எபேசியர் 3:9ல் உள்ள "அநாதி தீர்மானம்" என்ற இரண்டு வார்த்தைகளை, சபையைப் பற்றி நாம் சிந்திக்கையில் நமது கருத்தைத் தப்பிச் செல்லும்படி அனுமதித்து விடலாகாது. பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில், ஒரு திறவுகோல் வாக்கியத்தில் தேவனுடைய நோக்கமானது ஒரு தலைமை இடத்தைப் பெற்றுள்ளது:

> தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, … அவரைப் பற்றும் விசுவாசத்தால் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது (எபே. 3:9, 10, 12).

தேவனுடைய மிக மேன்மையான திட்டத்துடன் தொடர்புடைய எந்த சிந்தனையும் நிச்சயமாகவே, கவனம் நிறைந்த மற்றும் சிந்தனை நிறைந்த ஆய்வு செய்யும்படி அழைக்கின்றது. ஒருவேளை வேதாகமத்தில் உள்ள வேறு எந்த இரு வார்த்தைகளும் இவைகளின் தனிச் சிறப்பைக் காட்டிலும் அதிகம் சிறப்புடையதாக இல்லாது இருக்கலாம்.

பவுல் கூறியபடி, சபையானது தேவனுடைய அநாதி தீர்மானத்தின் நிறைவேற்றமாயிருக்குமென்றால், சபையின் முக்கியத்துவம் அரிதாகவே மிக அதிகமாய் வலியுறுத்தப்படுவதாகக் கூடும். சபையின் மூலமாகவே தேவனுடைய அநாதி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது என்று பவுல் விவரித்த பொழுது, சபையைப்பற்றி அவர், மறக்கவியலாத, ஒப்புமையற்ற ஒரு கண்ணோட்டத்தைக் கொடுத்தார்.

இந்தச் சொற்றொடரைப் பற்றி ஜெபத்துடனும், பகுப்பாய்வுடனும் சிந்தித்துப் பாருங்கள். தேவனுடைய அநாதி தீர்மானத்தின் நிறைவேற்றமாக சபை அடையாளப்படுத்தப்படுதல் என்பது சபையின் இயல்பைப் பற்றி நமக்குக் கூறுவதென்ன?

## இது வடிவமைப்பை அறிவிக்கின்றது

''அநாதி தீர்மானம்'' என்ற சொற்றொடரானது சபைக்கான ஒரு தெய்வீகத்துவ வடிவமைப்பை, ஒரு பரிசுத்த விருப்பத்தை மறைவாய் உணர்த்துகின்றது. ''சபையின் நோக்கம் என்ன?'' என்ற விசாரிப்புக்கு, சபையானது தேவனுடைய தெய்வீக நோக்கத்தின் செயல்பாடாக உள்ளது என்று நாம் பதில் அளிக்க வேண்டும்.

பாவம் நிறைந்த மனுக்குலத்தின் மீட்புக்காக இயேசுவின் மரணம்

*என்பது உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே முன்னறியப்பட்டதாக, முன் நியமிக்கப்பட்டதாக, முன் திட்டமிடப்பட்டதாக இருந்தது. பேதுரு, "... அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்பட்டாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து வின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப் பட்டவராயிருந்து ..." (1 பேது. 1:18-20) என்றெழுதினார். தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட காலத்தில், இயேசு நம்மை தேவனுடைய புத்திரர்களாக்குவதற்காகத் தம்முடைய சரீரத்தையும் இரத்தத்தையும் ஒப்புக் கொடுத்தார்: "நாம் புத்திர சுவிகாரத்தை அடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத் தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்" (கலா. 4:4, 5). நாம் கிறிஸ்துவின் சரீரமாக, சபையாக ஆகுகையில், புத்திரர்கள் என்ற இந்த சுவிகரித்தல் நடைபெறுகின்றது. பவுல், "தமக்கு (தேவனுக்கு) முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே, ... தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்" (எபே. 1:4, 6) என்று கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், கிறிஸ்துவுக்குள் வந்து இந்த சரீரத்தில் (சபையில்) உண்மை நிறைவுடன் குடி கொள்ளும் யாவரையும் தமது பிள்ளைகளாக சுவிகரிக்கவும், நித்தியத்திற்கும் இரட்சிக்கவும் தேவன் தாம் காலத்தைப் படைக்கும் முன்னரே தேர்ந்து கொண்டார். சபையானது இவ்விதமாகக் கண்ணோக்கப்படுகையில், அது தேவனுடைய திட்டமாக, உலகத்திற்கான அவருடைய கிருபையுள்ள வடிவமைப்பாக மட்டுமே புரிந்து கொள்ளப்பட முடியும்.*

*வேதாகமத்தின் புகழ் மிக்க ஆசிரியரான R.C. பெல் அவர்கள் தமது "எபேசியர் நிருபத்தின் பாடங்கள்" என்ற நூலில், "இரட்சிப்பின் இயல்பை உண்மையாகப் புரிந்து கொண்டுள்ள எவரும் சபையின் இன்றியமை யாமையைத் தள்ளி விடுதல் என்பது மிகவும் கடினமானதாயிருக்கும்"[1] என்று எழுதினார். சபையானது தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு முன்புள்ளதாகவோ அல்லது அதைத் தொடர்ந்து வருவதாகவோ வேதாகமத்தில் முன்னிறுத்தப் படுவதில்லை; இது இரட்சிப்புக்கான தேவனு டைய உண்மைத் திட்டத்தில் இருப்பதாக காண்பிக்கப்படுகின்றது, ஏனெனில் கிறிஸ்துவின் சரீரத்தில் - அவருடைய இரத்தத்தின் மூலமாகவே - நாம் தேவனுடைய மீட்கப்பட்ட பிள்ளைகளாக அவருக்கு முன்பாக நிற்கின்றோம். நாம் அவருடைய பிள்ளைகளானால், அவருடைய சபையாய் இருக்கின்றோம். நாம் அவருடைய சபையாயிராமல், அவருடைய பிள்ளைகளாக முடியாது, மற்றும் நாம் அவருடைய பிள்ளைகளாய் இராமல், அவருடைய சபையாக முடியாது. சபையானது தேவனுடைய நித்திய நோக்கத்துடன் இணைக்கப்பட்டதாயிருப்பதில்லை;*

அதுவே (சபையே) தேவனுடைய நித்திய நோக்கமாய்/அநாதி தீர்மானமாய் உள்ளது.

ஒருவேளை, நீங்கள் உங்கள் நண்பர்களில் ஒருவரைச் சந்திக்கின்ற தாகவும், அவர் தமது இருதயத்திற்கு மிக விருப்பமுள்ளதென்று நீங்கள் அறிந்துள்ள தமது பண்ணையில் ஒரு உலாச் செல்வதற்காக உங்களை அழைத்துச் செல்லுகிறார் என்றும் வைத்துக் கொள்வோம். மனதிற்கினிய பசும் புல்வெளியில் நீங்கள் நடக்கையில், அவர் உங்களிடம், தான் தனது குழந்தைப் பருவத்திலிருந்தே தனக்கென்று ஒரு பண்ணையைச் சொந்த மாகப் பெற்றிருக்க வேண்டும் என்று கனவு கண்டதாகக் கூறுகின்றார். இன்னும் அவர், ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னதாக இந்த நிலத்தை வாங்கி, அதை ஒரு அழகு நிறைந்த, உற்பத்தித் திறனுள்ள கால் நடை மேய்ச்சல் நிலமாக மாற்றிய பொழுது, தனது கனவை நிறைவேற்ற/நனவாக்கத் தொடங்கியதாகக் கூறுகின்றார். அவர் தமது பணியின் அதிகபட்சம் பயன் அடையும்படியாக யுக்தியான இடங்களில் தாம் கட்டிடங்கள் கட்டியதைப் பற்றிக் கூறுகையில் நீங்கள் அவரது முகத்தில் ஒளியையும், அவரது குரலில் பெருமையையும் கண்டு கேட்கின்றீர்கள். அவர் தாம் கவனமாகத் தேர்ந்தெடுத்துள்ள, மேம்படுத்தியுள்ள மற்றும் பெரிய மந்தையாக ஆக்கியுள்ள தமது கால் நடைகளை உங்களுக்குக் காண்பிக்கின்றார். நலம் காணும் மற்றும் மனவெழுச்சிமிக்க உணர்வுடன் அவர் தமது பண்ணைக் கான தமது எதிர்காலத் திட்டங்களை உங்களுக்கு விவரிக்கின்றார்.

இந்த உரையாடலுக்குப் பிறகு, இந்த மனிதர் தமது வாழ்வில் செய்துள்ளவைகள் பற்றி நீங்கள் வியப்படையத் தேவை இருக்காது. அவர் கூறியுள்ள மற்றும் செய்துள்ள ஒவ்வொன்றும், அவரது பண்ணையானது அவரின் பிரயாசமும் அன்புமாக உள்ளது என்பதை உங்களுக்கு அறிவிக்கின்றது. அது அவரது வாழ்வின் பணியாக இருந்துள்ளது மற்றும் இருக்கின்றது. அவர் செலவு செய்த சக்தி, அவர் செலவிட்ட பணம் மற்றும் தனது பேரவாவின் மையப் பகுதியாக இந்தப் பண்ணை இருக்கும்படியாக அவர் எதிர்காலத்திற்காகச் செய்த திட்டங்கள் ஆகிய எல்லாவற்றிலும் இது தெளிவாக உள்ளது. உரையாடலின் ஒவ்வொரு பாகமும், இந்தப் பண்ணை யானது அவருடைய இருதயம் போன்று முக்கியமானதாக இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

தேவனைப் பற்றியும் இதே விதமான உற்று நோக்கல் ஏற்படுத்தப்பட வேண்டும். காலத்தின் தொடக்கத்திலிருந்தே சபையானது தேவனுடைய திட்டமாயிருந்தது என்ற உண்மையும், இரட்சிப்பின் வரலாற்றின் பழைய ஏற்பாட்டுக் காலத்தின் போது இது (சபை) தீர்க்கதரிசனங்களின் குவிமையமாக/சுட்டிக்காட்டுதலாக இருந்தது என்பதும், மற்றும் இது (சபை) நமது கர்த்தருடைய பூமிக்குரிய ஊழியம் மற்றும் சிலுவை மரணம் ஆகியவற்றினால் விளைந்த உயிர்ப்பொருளாக உள்ளது என்பதும், கிறிஸ்துவும் அவரது சபையாருமே உலகத்தின் இரட்சிப்புக்கான தேவனு டைய மிக மேன்மையான திட்டம் என்பதைத் தவறற்ற வகையில் நிரூபிக்கின்றது. சபையை நிலவச் செய்வதை தேவன் தம்முடைய தயைமிக்க விருப்பமாக மனிதகுல வரலாற்றுக்கு முன்னதாகவே தம் சிந்தையில்

கொண்டிருந்தார்; இப்பொழுது, அவர் அந்த விருப்பத்தை ஒரு உண்மை நிலையாக்கி, சபையின் பரவுகை மற்றும் வளர்ச்சியைத் தமது தொடர்ந்து நடக்கும் ஊழியமாக இவ்வுலகில் இருக்கச் செய்துள்ளார்.

"தேவன் செல்லுகின்ற வழி எது என்பதைக் கண்டறிந்து, நாமும் அதே திசையில் செல்வது என்பதைத் தவிர வாழ்வில் அதிகமான வேலை ஒன்றும் இல்லை" என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார். தேவனுடைய நோக்கத்தை - அது என்னவாக உள்ளது மற்றும் அவர் அதை எவ்விதம் நிறைவேற்று கின்றார் என்பதை - நாம் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தால், தேவன் செல்லுகின்ற வழியை நாம் சிந்தையில் கொண்டு அவர் நம்மிலும் இந்த உலகத்திலும் நிறைவேற்ற நாடுபவற்றை நம் மனதில் கொண்டவர்களாய் இருப்போம். சபை என்பது தேவனுடைய நித்திய நோக்கத்தின் (அநாதி தீர்மானத்தின்) நிறைவேற்றமாக உள்ளதென்றும், அது நமக்கு அவரைப் பிரியப்படுத்துவதற்குத் தவறற்ற ஒரு ஓட்டத்தைக் கொடுத்தது என்றும் எபேசியர் 3:10, 11ல் பவுல் விளக்கப்படுத்தினார். நாம் அவரது சபையாராகி, அவரது சபையாராக உண்மையுடன் நிலைநின்று, அவரது சபையாராக அவரை மகிமைப்படுத்துவதே தேவனுடைய சித்தத்தின்படி நாம் செயல்படுகிறோம் என்பதை உத்தரவாதப்படுத்துகின்ற ஒரே வழியாகும்.

## இது தனிச் சிறப்பைத் தெரிவிக்கின்றது

இத்துடன் கூடுதலாக, தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியான சபை என்ற கருத்தமைவானது சபையின் பரிசுத்தமான தனிச் சிறப்பை நமக்குக் காண்பிக்கின்றது. சபை என்பது தேவனுடைய தெய்வீக வடிவமைப்பின் வெளிப்பாடாக இருந்தால், தேவனுக்குச் சபையின் மதிப்பு என்னவாக இருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள்!

கிறிஸ்துவின் சிலுவையை விலக்கி வைத்து விட்டு சபையின் இருத்த லானது புரிந்து கொள்ளப்படவோ மதிக்கப்படவோ முடியாது.[2] தேவனு டைய குமாரனான இயேசுவின் மரணமானது சபை அமைந்துள்ள அஸ்திபாரமாகவும் மற்றும் அதன் வளர்ச்சியின் காரணமாகவும் உள்ளது. இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவன் சிலுவையின் மூலம் சபையை உண்டாக்கவும் (எபே. 2:4, 5), சபையை நிலைநிறுத்தவும் (1 யோவா. 1:7) மற்றும் சபைக்கு ஊழியத்தை நியமிக்கவும் (2 கொரி. 5:18, 19) திட்டமிட்டார். ஆகையால் நாம் அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே (ரோமர் 6:3) கிறிஸ்துவின் சரீரத்தினுள் பிரவேசிக்கின்றோம்; மற்றும் அந்த சரீரத்தின் உண்மையான உறுப்பினர்கள் என்ற வகையில் நாம் தொடர்ந்து ஒளியில் நடக்கையில் அவருடைய இரத்தத்தின் மூலமாகப் பாவத்திலிருந்து நாம் தொடர்ந்து கழுவப் படுகின்றோம். இவ்விதமாக புதிய ஏற்பாட்டின் சபையானது (ஒரு உள்ளூர்க் கருத்தளவில்) கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக அவருடைய ஆவிக்குரிய சரீரத்தில் பிரவேசித்து, அதன்படி நடந்து, ஊழியம் செய்து, அந்த சரீரமாக ஆராதிப்பவர்களாய் இருக்கின்றோம், நாம் தேவனுடைய ஆவியாலும் கிறிஸ்துவின் வல்லமையாலும் ஆதரிக்கப்பட்டு,

பலப்படுத்தப்பட்டவர்களாய் இவைகளைச் செய்கின்றோம். இதுவே உலகத்தின் மீட்புக்காகத் தேவனுடைய திட்டமாக உள்ளது.

புதிய ஏற்பாட்டின் சபைக்குப் புறம்பேயுள்ள எவரும் தேவனுடைய நித்திய நோக்கத்திற்குப் புறம்பே உள்ளவராகின்றார், தேவனுடைய நித்திய நோக்கத்திற்குப் புறம்பேயுள்ள எவரும் தேவனுடைய மீட்பின் பணிக்குப் புறம்பே உள்ளவராகின்றார். சபையைப் பற்றிய இந்த சத்தியமானது இரண்டு திறவுகோல் சத்தியங்களை முன் குறிக்கிறது: (1) மனிதரின் இரட்சிப்பைக் கொண்டு வருவதற்கு நாடுகின்ற தேவன் இவ்வுலகத்தில் செயல் படுகின்றவராய் இருக்கின்றார். அவர் தமது இரட்சிப்பின் திட்டத்தைச் செயல் படுத்துவதில் தீவிரமாக இருக்கின்றார், இந்த திட்டமானது உலகத் தோற்றத்திற்கு முன்பே அவருடைய சித்தத்தில் இருந்ததாகவும், உலகத்தின் இருப்பு முழுவதிலும் அவரால் வளப்படுத்தப்பட்டு, வழி நடத்தப்பட்டு மற்றும் ஆசீர்வதிக்கப்பட்டதாகவும் இருந்தது. இது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஊழியமாக, மனிதன் மீது அவர் கொண்ட மாபெரும் அன்பிலிருந்து உதயமானதாக உள்ளது, மற்றும் இது பவுலினால், "அவருடைய அநாதி தீர்மானம்" (எபே. 3:9) என்று விவரிக்கப்பட்டது. (2) புதிய ஏற்பாட்டின் சபையானது தேவனுடைய அநாதி தீர்மானத்தின் வழிமுறையாக, உருவாக்கமாக மற்றும் உண்மை நிலையாக உள்ளது.

---

*சபையை இருக்கச் செய்தல் என்பது மனித குல வரலாற்றுக்கு முன்பு தேவனுடைய நோக்கமாக இருந்தது; இப்பொழுது ... சபையின் பரவுகை மற்றும் வளர்ச்சி என்பது உலகத்தில் தொடரும் அவருடைய ஊழியமாக உள்ளது.*

---

இரட்சிப்புக்கான தேவனுடைய வழியானது திருமணத்துடன் ஒப்பிடப்படலாம். இல்லத்திற்கும் இனப்பெருக்கத்திற்கும் தேவன் ஒரு திட்டம் கொண்டுள்ளார். அந்தத் திட்டம் என்ன? நாம் அனைவரும் இதற்கான பதிலை அறிந்துள்ளோம்: அது திருமணமேயாகும். வேத வசனங்களின் எளிமையான போதனைகளின் அடிப்படையில், நாம் குடும்பத்தில் மகிழ்ச்சிக்கான தேவனுடைய அந்த நோக்கமானது ஒரு ஆணும் பெண்ணும் அவருடைய சட்டங்களின் கீழ் கணவனும் மனைவியுமாக வாழ்வதற்கானது என்று கூறமுடியும். தேவன் ஆணையும் பெண்ணையும் படைத்த வேளையில் திருமணத்திற்கும் இவ்வுலகிற்குப் பிள்ளைகளைக் கொண்டு வருவதற்குமான தம்முடைய திட்டத்தை அறியச் செய்தார். சட்டத்திற்குப் புறம்பான திருமணத்தின் மூலமாக இந்த உலகத்திற்குப் பிள்ளைகளைக் கொண்டு வர முடியுமா? முடியும். சட்டப்படியான திருமணத்திற்குப் புறம்பே மகிழ்வையும் ஆறுதலையும் மக்கள் நாடுகின்றனரா? ஆம். இருப்பினும் இது நடக்கும் போது இந்த மகிழ்வில் தேவனுடைய சித்தமானது குறுக்கே கடக்கப்பட்டு விடுகின்றது, மற்றும் இனப்பெருக்கத்திற்கும் குடும்ப மகிழ்வுக்குமான அவரது

நோக்கமானது தோல்வியடையச் செய்யப்படுகின்றது. தேவனால் கட்டளையிடப்பட்டுள்ள திருமணத்திற்குப் புறம்பே உள்ள இல்லத்தில் ஒரு குழந்தை வாழ்வது என்பது அக்குழந்தைக்கோ அல்லது அதன் பெற்றொருக்கோ மிகச் சிறந்த விஷயமாய் இருக்குமா? இல்லை, ஏன்? அவர்கள் சமூகம் மற்றும் தனிப்பட்ட மகிழ்ச்சிக்கான தேவனுடைய திட்டத்தைத் தவற விடுகின்றனர்!

புதிய ஏற்பாட்டின் சபை என்பது உலகத்தின் மீட்புக்கான தேவனுடைய திட்டமாக உள்ளது. இதுவே அவருடைய ஒரே ஒரு திட்டமாக உள்ளது. புதிய ஏற்பாட்டு சபையைப் புறக்கணித்தால் நமக்கு என்ன நேரிடும்? உண்மையான சபையாய் இராத மத அமைப்பு ஒன்றில் நாம் மத நடவடிக்கையைக் கொண்டிருக்க முடியுமா? ஆம். சபைக்குப் புறம்பே, தனிப்பட்ட மக்களாக இருந்து கொண்டு நாம் நல்ல நோக்கங்களுடைய குழுவாக இரக்கம் நிறைந்த ஆச்சரியமான செயல்களைச் செய்ய முடியுமா? ஆம். இருப்பினும் பின்வருவதுதான் முக்கியமான கேள்வியாக உள்ளது: ''நாம் தேவனுடைய நித்திய தீர்மானத்தை நிறைவேற்றுகின்றோமா?'' இதற்கு "இல்லை" என்பதே வேத வசனங்களின்படியான பதிலாக உள்ளது. தேவனுடைய அநாதி தீர்மானத்திற்குப் புறம்பே இருந்து கொண்டு நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற முடியுமா? மீண்டும் ''இல்லை, முடியாது'' என்பதே பதிலாக உள்ளது.

நாம் புதிய ஏற்பாட்டின் சபையாகிய கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கும் பொழுது மட்டுமே தேவனுடைய ''நித்திய தீர்மானத்தின்'' நிறைவேற்றத்தை அனுபவிக்கின்றோம் என்பது உண்மையாக இருப்பதால், எவரொருவரும் தாம் அந்த சபையாராக வாழாத வரையில் திருப்தியடையக் கூடாது என்ற கருத்து தொடருகின்றது. ஒருவர் கர்த்தருடைய சபையாராகும் பொழுது, அவர் இந்த உலகத்தைத் தேவனுக்குள் ஒப்புரவாக்குகின்ற தேவனுடைய கிருபையுள்ள வடிவமைப்புக்குள் இருக்கின்றார்.

## இது நிலைப்புத் தன்மையை அறிவிக்கின்றது

மற்றும், சபையானது தேவனுடைய ''அநாதி தீர்மானமாக'' உள்ளதென்ற உண்மையானது சபையின் தொன்மை வாய்ந்த நிலைப்புத் தன்மையை அறிவிக்கின்றது. சபை என்பது, மனிதனுடைய தேவைக்கு இன்னும் அதிகமாக ஏற்புடையதொன்று கொடுக்கப்படும் வரைக்கும் ஒரு தற்காலிகப் பதிலீடு என்ற வகையில் உள்ளது அல்ல. இது குறிப்பிட்ட திட்டமானது கொண்டு வரப்படும் வரைக்கும் அமைக்கப்பட்ட ஒரு திட்டம் அல்ல.

சபை என்பது கிறிஸ்தவ யுகத்திற்கான தேவனுடைய திட்டமாக உள்ளது. பவுல், "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" (எபே. 3:21) என்று கூறினார். தேவனுடைய ராஜ்யம் என்ற வகையில் (தானி. 2:44; மத். 16:18) நிலைநாட்டப்பட்ட சபையானது பரலோக

*ராஜ்யத்தின் பூமிக்குரிய விளக்கமாக உள்ளது, இதில் நாம் இப்பொழுது அவருடைய குடும்பமாய் இருப்பதை மகிழ்வுடன் அனுபவிக்கின்றோம், மற்றும் மகிமையில் பிரவேசிக்கும் பொழுது இதை முழுமையான கருத்தில் இன்னும் அதிக மகிழ்வுடன் அனுபவிப்போம் (2 பேது. 1:11).*

*சபை என்ற வடிவத்தில் தேவன் தம்முடைய ஆவிக்குரிய இராஜ்யத்தை இவ்வுலகத்திற்குக் கொண்டு வருவதற்கு முன்பு பல ஆண்டுகள் தயாரிப்பானது தேவையாய் இருந்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவைக் குறித்த முதல் குறிப்பானது ஆதி. 3:15ல் காணப்படுகின்றது, இங்கு சாத்தான்மேல் கொள்ளப்படும் வெற்றியானது மறைமுகமாய்ச் சுட்டிக்காட்டப்பட்டு, தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. பிற்பாடு, பிதாக்களின் யுகத்தில், மேசியாவைப் பற்றி ஆபிரகாமுக்குத் தனிச் சிறப்பான ஒரு வாக்குத்தத்தம் அருளப்பட்டது: "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி. 12:3; இ.வ. 13:15; கலா. 3:16). தேவன் ஆபிரகாமுக்கு ஏற்படுத்திய (இந்த) வாக்குத்தத்தத்திற்கும், அந்த வாக்குத்தத்தத்தை அவர் இயேசுவுக்குள் நிறைவேற்றுவதற்கும் இடையில் மோசேயின் பிரமாணமானது இடைச் செருகப்பட்டது (கலா. 3:19). ஆகையால், பிதாக்களின் யுகமும் மோசேயின் யுகமும், வரவிருந்த மேசியாவுக்கும் அவரது இராஜ்யத்தின் நிலைநாட்டுதலுக்கும் அவசியமான தயாரிப்புப் பணியை அளித்தன. இயேசு தம்முடைய சொந்த ஊழியத்தின் போது தம்முடைய போதனைகள், பன்னிரு அப்போஸ்தலர்களுக்குத் தம்முடைய பயிற்சி, தம்முடைய முன்மாதிரி, தம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல், மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின் தந்த தம்முடைய தரிசனங்கள் ஆகியவற்றின் மூலம் அந்த இராஜ்யத்திற்கு அஸ்திபாரம் இட்டார்.*

*அப். 2ன்படி பெந்தெகொஸ்தே நாளன்று இராஜ்யம் பெலத்துடன் வந்தது (மாற். 9:1; அப். 1:8ஐக் காணவும்), அன்று சபையானது ஸ்தாபிக்கப்பட்டது. கிறிஸ்தவர்களைக் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய உறுப்புக்களாகக் காணும் பொழுது அவர்களை சபையார் என்று நாம் அடையாளம் கண்டு கொள்கின்றோம்; கிறிஸ்தவர்களை தேவனுடைய ஆளுகைக்கு ஒப்புக் கொடுத்துள்ள மக்களாகக் காணும் பொழுது நாம் தேவனுடைய இராஜ்யத்தை அவர்களில் காண்கின்றோம். கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமான சபையானது, தேவன் ஆதாமைப் படைக்கும் முன்பாகவே அவர் தம் சிந்தையில் திட்டமிட்டிருந்த பரிசுத்த திட்டமாக உள்ளது.*

*பவுலின் கூற்றுப்படி, இப்பொழுது - சபையின் மூலமாக - மட்டுமே பல ஆண்டுகளாக வடிவமைப்பட்ட தேவஞானமானது நிறைவேறுவதைத் தூதர்கள் காண முடியும். பவுல், "உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக" என்று எழுதினார் (எபே. 3:10). "உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும்" என்பது தூதர்களைக் குறிப்பதாய் இருக்க வேண்டும். அவர்கள் எங்கிருந்து வந்தாலும், சபையாகிய கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தை அவர்கள்*

கண்ணோக்கி, ''நாங்கள் இப்பொழுது காண்கின்றோம். நாங்கள் இப்பொழுது புரிந்து கொள்ளுகின்றோம். பல ஆண்டுகளாகத் தேவன் தாம் நிறைவேற்றச் செயல்பட்டிருந்தது இப்பொழுது தெளிவாக உள்ளது. கடைசியாக நாங்கள், அவருடைய அநாதி தீர்மானத்தின் நிறைவேற்றத்தைக் காண்கின்றோம்'' என்று கூறுகின்றனர். மீட்பு என்றால் என்னவென்று தூதர்கள் அறிய மாட்டார்கள், ஏனென்றால் அவர்கள் மீட்பை அனுபவித்ததில்லை (1 பேது. 2:4). ஒருவேளை இதுவே பேதுருவுக்கு ஏவப்பட்ட கூற்றின் அர்த்தமாக இருக்கலாம்: "தங்கள் நிமித்தமல்ல, நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப் பார்க்கத் தேவ தூதரும் ஆசையாயிருக்கிறார்கள்" (1 பேது. 1:12).

ஹார்டிங் பல்கலைக் கழகத்தில் உள்ள எனது மாணவர்களிடம், அவர்கள் தூதர்களால் கவனிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் என்று நான் அடிக்கடி அவர்களுக்கு நினைவூட்டுவதுண்டு. அவர்களிடத்தில் நான், "கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் நமது வளாகத்தைக் கடந்து சென்று கிறிஸ்துவுக்காக இப்பூமியில் அவருடைய ஆவிக்குரிய சரீரமாக வாழுகையில், உங்களைக் கவனித்துப் பார்க்கும் தூதர்கள், 'ஆ! கிறிஸ்தவராயிருப்பதன் அர்த்தம் என்னவென்று நாங்கள் இப்பொழுது அறிகின்றோம். தேவனுடைய திட்டம் என்ன என்பதை இப்பொழுது நாங்கள் காண முடிகிறது' என்பார்கள்'' என்று கூறுவதுண்டு. இந்தப் பூமியில் உள்ள கிறிஸ்தவரல்லாத மக்களும் கூட நம்மை நோக்கிப் பார்த்து, "இதோ இங்கு தேவனுடைய வசனம் உருவாக்குகின்ற வாழ்க்கை உள்ளது. நான் அவ்விதமான வாழ்வை விரும்பினால், அதைப் பெறுவதற்கு நான் என்னைத் தேவனுடைய மீட்பின் வழிக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்'' என்று கூறலாம்.

கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக நாம் தேவனுடைய அநாதி தீர்மானத்துக்கு உட்பட்டவர்களாய் இருக்கின்றோம், இந்தத் திட்டமானது உலகத்தின் மீட்புக்கான தேவனுடைய நிறைவான நோக்கமாய் உள்ளது, மற்றும் இது நித்தியத்தில் பரலோகத்தின் நித்திய இராஜ்யத்திற்குள் நாம் ஏற்றுக்கொள்ளப்படும்போது தனது கடைசியான நிறைவேற்றத்தைக் காணும் (2 பேது. 1:10, 11). அவருடைய சபையானது இரு உலகங்களில் பங்கேற்கின்றது: அது தற்பொழுது பூமிக்குரிய வகையிலான ஒரு இராஜ்யமாய் உள்ளது (கொலோ. 1:13) மற்றும் இது வரவிருக்கும் பரலோக இராஜ்யமாகவும் உள்ளது (2 தீமோ. 4:1). இந்த இராஜ்யத்தை எபிரெயருக்கு நிருபம் எழுதியவர் ''அசைவில்லாத இராஜ்யம்'' (எபி. 12:27) என்று அழைத்ததில் வியப்பேதும் இல்லை.

## முடிவுரை

எனவே, வேத வசனங்களின்படியாக, சபை என்பது தேவனுடைய

நோக்கத்திற்கான மக்களாக உள்ளது. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையின் மூலமாக இரட்சிப்பை அருளுதல் என்பது தேவனுடைய பெருந்தன்மை மிக்க திட்டமாக இருந்தது. அப். 2ல் பெந்தெகொஸ்தே நாளன்று சபை நிலைநாட்டப்பட்டதில் அவருடைய பரிசுத்த நோக்க மானது உண்மை நிலையாக ஆனது.

"அநாதி தீர்மானம்" என்ற சொற்றொடரானது சபையே உலகத்தின் இரட்சிப்புக்கான தேவனுடைய வடிவமைப்பாகவும் முடிவாகவும் உள்ளது என்பதை மறைமுகமாய் எடுத்துரைக்கின்றது. தேவனுடைய அநாதி தீர்மானமாயிருப்பதில் இது தனிச்சிறப்பையும் நிலைத்த தன்மையையும் கொண்டுள்ளது.

இந்த அண்டத்தையும் மனிதரையும் படைத்தவர் என்ற வகையில் தேவன் எல்லா உண்மை நிலைகளிலும் மாபெரும் உண்மை நிலையாக உள்ளார். இருக்கின்ற ஒவ்வொன்றும் தேவன் அல்லது தேவனற்றது என்று வகைப்படுத்தப்பட முடியும்: தேவன் இருக்கின்றார், எனவே பொருள்களும் உயிர்களும் தேவனாலேயே படைக்கப்படுகின்றன. அந்த இரு வகைகளும் இருக்கின்ற எல்லாவற்றையும் தமக்குள் அடக்குகின்றன. இந்த இரு குழுக்களையும் பற்றிச் சிந்தித்தலானது தேவன் படைத்த உலகில் நமது இடத்தைக் காணவும், அண்டத்தில் தேவனுடைய வல்லமை மற்றும் புலன் கடந்த நிலை ஆகியவற்றைக் காணவும் நமக்கு உதவுகின்றது. நாம் படைக்கப்பட்ட உயிர்களாய் இருக்கின்றோம், மற்றும் தேவன் சர்வ வல்லவராக, சகலமும் அறிந்தவராக, எங்கும் இருக்கின்றவராக, மற்றும் நித்தியமானவராக இருக்கின்றார். அவருடன் ஒத்துப் போகாமல் ஜீவிப்பதென்பது, மனிதன் செய்யக் கூடிய பெரும் தவறாயிருக்கின்றது. இதன் எதிரிடையும் உண்மையானதாக உள்ளது: அவருடைய சித்தத்துடன் ஒன்றாயிருத்தல் என்பது அவருடன் இசைவாயிருத்தல் என்றும் தெய்வீக நம்பிக்கை மற்றும் நித்திய வாக்குத்தத்தத்தினால் நிறையப்படுதல் என்றும் ஆகின்றது.

கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்திற்குப் புறம்பே உள்ள எவரும் அவருடைய நித்திய தீர்மானத்திற்குப் புறம்பே உள்ளவராகின்றார். ஆகையால், தனது வாழ்வு மற்றும் அடைவிடம் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கும் எவரொருவருக்கும் கிறிஸ்துவின் சரீரத்தினுள் பிரவேசித்தல் என்பது அடிப்படைக் கவனத்திற்கு உரியதாக இருக்க வேண்டும்.

இயேசுவின் வார்த்தைகளை நாம் கேட்போம்: "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 3:5).

ஆவியானவருடைய அழைப்பை நாம் கவனிப்போம்: "ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்" (வெளி. 22:17).

எனவே, கிறிஸ்துவின் சபையாராய் ஆன பிறகு, நாம் நமது எஞ்சியுள்ள வாழ்வுக்குப் பவுலின் பின்வரும் வார்த்தைகளில் நமது இருதயங்களைச்

செலுத்துவோம்: "... அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்துப் பரிசுத்தமாக்குகிறதற்கும், ... தம்மைத் தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்" (எபே. 5:25-27).

தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியாக ஒருவர் இவ்வுலகத்தில் வாழாத வரைக்கும் அந்நபர் தாம் வாழ்வதற்கான உண்மையான நோக்கத்தைக் கொண்டிருக்க முடியாது. நீங்கள் அவருடைய தீர்மானத்தின் படி வாழ்பவர்களில் ஒருவராக இருக்கின்றீர்களா?

குறிப்புகள்

[1]R.C. Bell, *Studies in Ephesians* (Austin, Tex.: Firm Foundation Publishing Co., 1971), 16. [2]ஜேம்ஸ் D. பேல்ஸ் அவர்கள் இந்தச் சத்தியத்தைக் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். ஜேம்ஸ் D. பேல்ஸ் அவர்களின் *சிலுவையும் சபையும்* (Shreveport, La.: Lambert Book House, n.d.) என்ற நூலில் காணவும். மற்றும் J.D. தாமஸ், ed., அவர்களின் *God's Eternal Purpose*, Abilene Christian College Lectures (Abilene, Tex.: Abilene Christian College Book Store, 1969) என்ற நூலில் காணவும்.

## படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. "அவருடைய கிருபையின் ஐசுவரியங்களின்படியே" என்ற சொற்றொடரை விளக்கப்படுத்தவும். எபே. 1:7ஐக் காண்க.
2. "தேவனுடைய அநாதி தீர்மானம்" என்ற சொற்றொடரின் அர்த்தத்தைக் கலந்துரையாடி அறியவும். எபே. 3:11ஐ வாசிக்கவும்.
3. தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்பே இயேசுவின் மரணத்தை முன் குறித்திருந்தாரா? அப்படியென்றால் ஏன்?
4. "காலம் நிறைவேறின பொழுது" என்ற சொற்றொடர் உணர்த்தும் கருத்து என்ன?
5. சபை என்பது தேவனுடைய திட்டத்துடன் கூட்டப் பட்டதாக உள்ளதா அல்லது சபை என்பது திட்டமாகவே உள்ளதா? விளக்கப்படுத்தவும்.
6. சபையானது தேவனுடைய பிள்ளைகளால் ஆனதென்றால், தேவனுடைய சபையாயிராமல் ஒருவர் தேவனுடைய பிள்ளையாய் இருக்க முடியுமா?
7. சபையானது சிலுவையினால் உண்டாக்கப்பட்டதெப்படி என்று விளக்கவும்.
8. ஒருவர் சபைக்குப் புறம்பே இருந்தால், அவர் தேவனுடைய

*அநாதி தீர்மானத்திற்குப் புறம்பேயும் இருக்கின்றாரா?*

9. *சபையானது தேவனுடைய அநாதி தீர்மானமாக உள்ளது என்ற கருத்தினால் முன் குறித்த இரண்டு சத்தியங்கள் யாவை?*
10. *சபைக்குப் புறம்பே ஒருவர் மதச் செயல்பாட்டில் ஈடுபட முடியுமா? அவ்வாறு அவர் செய்கின்றாரென்றால், அவர் தேவனுடைய அநாதி தீர்மானத்தின் பாகமாய் இருக்கின்றாரா?*
11. *சபையின் மூலமாக நாம் தேவனுக்கு எவ்விதத்தில் மகிமையைக் கொண்டு வருகின்றோம்? எபே. 3:20ஐக் காணவும்.*
12. *கர்த்தருடைய நித்திய திட்டத்தின் முழுமையான முக்கியத்துவத்தைத் தூதர்கள் எவ்விதம் புரிந்து கொண்டனர்? எபே. 3:10, 11ஐக் காணவும்.*
13. *சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருவர் பிரவேசிப்பது எவ்விதம்?*